Registered as a Newspaper

TOEFL
The guiding star to pastures new classes in the peace and quiet of Uduvil For Sept. Oct. Nov. tests. Three lessons per week. Duration each lesson 2 hrs. Classes – everyday, all day. Classes to suit individuals.
Convenience
Individual Attention
THE KEY NOTE

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

TOEFL
A boon to the students of Uduvil Manipay the neighbouring town ships and hamlats. 40 listening comprehensions, including nancy stanley 3 'Teasers' 2 18 past papers, 55 practice exercises, for further details contact:- Victor S. Kituparaj. c/o K.J Kanagasingam Manipay Road, Uduvil, Chunnakam.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸூ ஆனி மீ 24 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 11 (08 – 07 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 191

# வடமராட்சியில் மீண்டும் புலிகளின் 'சென்றி'கள்

## இராணுவ நடமாட்டம் பல இடங்களில் குறைவு

வடமராட்சி, ஜூலை 8

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நெல்லியடி மத்தியமகா வித்தியாலய இராணுவ முகாம் புலிகளினால் தகர்க்கப்பட்டதை அடுத்து வடமராட்சியின் பல பகுதிகளில் புலிகளின் "சென்றி"கள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

இராணுவ முகாம்களுக்கு சமீபமாக புலிகள் புதிதாகச் சென்றிகளை அமைத்திருப்பதால் இராணுவத்தினரின் நடமாட்டம் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

நெல்லியடி முகாம் தகர்க்கப்பட்டு இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து வடமராட்சியில் உள்ள பிரதான முகாம்களில் இருந்தும் மினி முகாம்களில் இருந்தும் இராணுவத்தினர் வெளியேற முயலவில்லை என்றும் முகாம்களிலேயே தங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சிலவாரங்களாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி மூலம் சடலங்களை மீட்கும் முயற்சி தோல்வி

### கண்ணீர்ப் புகைக்குண்டு வீசி தரை இறங்கவும் பிரயத்தனம்

வடமராட்சி, ஜூலை 8

நெல்லியடி முகாம் இடிபாடுகளுக்கிடையில் கிடக்கும் சிப்பாய்களின் சடலங்களை ஹெலிகளால் மீட்கமுடியவில்லை. கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி தரையிறங்க முயற்சித்தும் பயனில்லாமல் போய்விட்டது.

நெல்லியடி முகாம் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து இரு ஹெலிகள் முகாமில் இறக்கி, இறந்த சிப்பாய்களின் உடல்களை மீட்க முயற்சித்தன.

போராளிகள் ஹெலிகளை இறங்கவிடாது எதிர்த்துத் தாக்கினர்.

திடீரென கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியபடி ஒரு ஹெலி தரையிறங்க முயன்றது.

போராளிகளின் உக்கிரமான தாக்குதல்களால் இந்த முயற்சி பலன் அளிக்கவில்லை. (இ-ள-160)

## வதிரியில் ஷெல் தாக்கி இரு வயோதிபர் பலி!

வடமராட்சி, ஜூலை 8

ஞாயிறு இரவு பருத்தித்துறை, மண்டான் முகாம்களிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகளுக்கு இரு வயோதிபர்கள் பலியாயினர். வயோதிப மாது ஒருவர் ஷெல் காயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நாய் ஒன்றும் கொல்லப்பட்டது.

நெல்லியடி முகாம் தகர்க்கப்பட்டதைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கரவெட்டியிலும் 2 பேர் ஷெல் குண்டினால் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 8

கரவெட்டி சென். அந்தோனியார் தேவாலய அகதி முகாமுக்கு அருகில் விழுந்து வெடித்த ஷெல் குண்டுகளினால் இரண்டு பேர் பலியானார்கள். ஐந்துபேர் காயமடைந்தனர். தேவாலயமும் சிறிது சேதமடைந்தது.

நேற்றுக் காலை இச் சம்பவம் நடைபெற்றது.

இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட மேலும் பல ஷெல் குண்டுகள் வீதியிலும் வீடுகளிலும் விழுந்து வெடித்ததன் காரணமாக மேலும் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் எஸ். சூசைப்பிள்ளை, எம். மயில்வாகனம் ஆகிய இருவருமே கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த பலர் ஆஸ்பத்திரிக்குச் செல்ல முடியாத நிலையில் வீடுகளில் இருப்பதாகவும் கூறப்பட்டது. (உ-10)

## அங்கங்களை நாய்கள் இழுத்து செல்கின்றன

### முகாம் எங்கும் பிணவாடை

வடமராட்சி, ஜூலை 8

தகர்க்கப்பட்ட நெல்லியடி இராணுவமுகாம் இடிபாடுகளுக்கிடையில் சிக்கிச் சிதறிக் கிடக்கும் சிப்பாய்களின் அங்கங்களை நாய்கள் இழுத்துச் சென்று கொண்டிருக்கின்றன என்று நெல்லியடியில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முகாமின் சுற்றாடலில் ஒரே பிணவாடை வீசு

(4ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் அவ்ரோ

வடமராட்சி, ஜூலை 8

சிறிய அவ்ரோ பயணிகள் விமானங்கள் இரண்டு நேற்று வடமராட்சிப் பகுதிகளைச் சுற்றிவட்டமிட்டன.

இந்த இரு விமானங்களிலும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் வந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது (இ-ள)

## வடமராட்சிக்கு வந்த 5 இணைப்பதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 8

ஐந்து இராணுவ இணைப்பதிகாரிகள் வடமராட்சி வந்து அங்கு தங்கி உள்ளனர்.

நெல்லியடி இராணுவ முகாம், விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டதை அடுத்து இவர்கள் வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்துள்ளனர்.

தகர்க்கப்பட்ட நெல்லியடி இராணுவ முகாமை ஹெலிக்கொப்டரில் இருந்து இவர்கள் பார்வையிட்டனர். (இ-10)

முச்சந்தி முரளி



'மிராஜ்' ஜைக் கண்டதும் உணவுச்சாமான்கள் கொண்டு வாறதுக்கு ஓம் எண்டவை இப்ப உதெல்லாத்தையும் சொல்லி அழுது என்ன பிரயோசனம்...?

## இந்தியக் கப்பல்களை நிறுத்தவேண்டிய காலம் வந்து விட்டது

### பிரதமர் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 8

இந்திய உணவுக் கப்பல்கள் வடக்கே வருவதை நிறுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது.

—இப்படி கூறினார் பிரதமர் பிரேமதாசா.

இந்திய உணவுக் கப்பல்களைத் தொடர்ந்து யாழ் வர அனுமதிப்பது பற்றி நேற்று நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமை வகித்தார்.

அங்கு உரையாற்றுகையிலேயே பிரதமர் பிரேமதாஸ இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்திய அரசு, ஸ்ரீ லங்கா அரசின் அனுமதியுடன் தான் உணவுக் கப்பல்களை அனுப்பி வருகின்றது.

ஆனால் இது அபாயகரமான நிலையைத் தான் தோற்றுவிக்கும்.

மேலும் கப்பல்களை அனுப்புவதை இந்தியா நிறுத்தவேண்டும்.

அப்படி உணவுக் கப்பல்களை இந்தியா அனுப்பி வைக்க விரும்பினால் அவற்றை கொழும்புத் துறைமுகத்துக்கே அனுப்பி வைக்கவேண்டும்.

#### தீவிரவாதிகள் தடுத்தனர்

கொழும்பில் இறக்கப்படும் உணவுப் பொருள்கள் கூட இந்திய, ஸ்ரீ லங்கா அதிகாரிகளின் மேற்பார்வையில் விநியோகிக்கப்பட வேண்டும்.

நாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்பி, அவற்றை யாழ் மக்களுக்கு விநியோகிக்க முயற்சித்தபோது தீவிரவாதிகள் அதைத் தடுத்து நிறுத்தினர்.

ஆனால் இந்திய அரசு அனுப்பும் உணவுப் பொருள்களை தீவிரவாதி

(4ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
08-07-1987
புதன்கிழமை
சுபநேரம்:-
4 28முதல் 5.58வரை
ராகுகாலம்:-
11.58 முதல் 1.28 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

## உணவுப் பொருள்: இங்கு வர இருக்கும் இந்திய ராணுவத்துக்கு!

கொழும்பு, ஜூலை 8

யாழ்ப்பாணத்துக்கு இந்திய அரசு அனுப்பிவைக்கும் உணவுப் பொருள்கள் இந்திய இராணுவம் அங்கு வருவதற்கான முன் ஏற்பாடாகும்.

யாழ்ப்பாணம் வர இருக்கும் இந்திய இராணுவத்துக்காகவே உணவுப் பொருள்கள் இப்போது அனுப்பப்படுகின்றன.

– இவ்வாறு நேற்று நடந்த நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசிய உயர் கல்விப் பிரதி அமைச்சர் திரு. ஏ. ஆர். பி. எம். அத்தநாயக்கா தெரிவித்தார். (அ)

## ஹெலி மூலம் மட்டுநகர் சென்று திரும்பினார் கப்டன் குப்தா

### படுகொலை நடந்த இடத்தை பார்க்க முயன்று ஏமாற்றம்

கொழும்பு, ஜூலை 8

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் குப்தா மட்டக்களப்புக்கு ஹெலிக்கொப்டர் மூலம் சென்றார்.

வவுணதீவு, பாவற்கொடிச்சேனையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் 17 தமிழ்ப் பொதுமக்கள் உயிழந்தனர் அல்லவா? அந்த அனர்த்தங்களைப் பார்வையிடவே கப்டன் குப்தா மட்டக்களப்பு சென்றிருந்தார்.

பிரசைகள் குழுக்களுடன் சுதந்திரமான முறையில் சம்பவம் நடந்த இடத்தைச் சென்று பார்க்கும் தனது விருப்பத்தை கப்டன் குப்தா கல்லடி முகாம் அதிகாரியிடம் வெளியிட்டார்.

உயர் இராணுவ அதிகாரியும் கூட வரவேண்டும் என்று கல்லடி முகாம் அதிகாரிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 12 பேர் பலி!

லண்டன், ஜூலை 8

பஞ்சாப் எல்லையில் உள்ள ஹரியானா மாநிலப் பகுதியில் நேற்று மாலை மற்றொரு பஸ் பயணிகள் படுகொலைச் சம்பவம் இடம் பெற்றதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

(முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்) (உ)

## கலிகைச் சந்தியில் மோதல்: 7 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாக்கரை, முள்ளி ஆகிய முகாம்களில் இருந்து பெருமளவில் வெளியேறி முன்னேற முன்ற படையினர் மீது கலிகைச் சந்தியில் வைத்து தாம் நடத்திய தாக்குதலில் 7 இராணுவத்தினர் பலியானதாகவும், பலர்படுகாயமடைந்ததாகவும்புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை சுமார் 4 மணி நேரம் இந்த மோதல் தொடர்ந்து நடைபெற்றதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். (உ)

## நயினைத் தேர்: விசேட படகுசேவை

யாழ்ப்பாணம், ஜூலை 8

நாளை நடை பெறும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழாவை முன்னிட்டு அடியார்களின் வசதிகருதி, நாளை காலை 6 மணி முதல் குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவிற்கு விசேட படகு சேவைகள் தொடர்ந்து நடைபெறும்.

இப்படகு சேவையைத் தொடர்வதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து வ. பி. போ. சபையின் பஸ்சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஆலயச் சூழலில் எந்த வித அசம்பாவிதங்களும் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்–

பாதுகாப்பு படையின

(4ஆம் பக்கம் பார்க்க)

## எத்தரப்பும் வன்முறையில் ஈடுபடக் கூடாது

### இந்தியா சொல்கிறது

புதுடில்லி, ஜூலை 8

இலங்கையில் நிலைமை மோசமடையும் விதத்தில் எந்தத் தரப்பும் வன்முறையில் ஈடுபடக் கூடாது.

-இப்படி இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

புதுடில்லியில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி பல சிப்பாய்களைக் கொன்றது உண்மையானால் அது யாழ். மக்களுக்கு இந்திய நிவாரண உதவிகள் விநியோகிக்கப்படுவதைப் பாதிக்கும்.

இலங்கை மக்களிடையே கோபதாபத்தை ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையையும் எத்தரப்பும் எடுக்கக் கூடாது.

இன்று யாழ். தமிழ் மக்களுக்கு அவசியமாகத் தேவைப்படுவது உணவுப் பொருள்கள் தான்–இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

## முகாமிலிருந்து 500 யார் தூரத்தில் அதிபர் சுடப்பட்டார்

### மரணவிசாரணையில் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

மாவிட்டபுரம் இராணுவ சென்றியில்இருந்து 500 யார் தூரத்தில் வைத்து காலஞ்சென்ற அதிபர் சிவராசா இராணுவத்தினரால் சுடப்பட்டார்.

வீமன்காமம் மகா வித்தியாலய அதிபர் முத்தையா சிவராசாவின் மரண விசாரணையின்போது சாட்சியமளித்த வை. சிதம்பரநாதன் இப்படித் தெரிவித்தார்.

யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் இந்த மரணம் தொடர்பான விசாரணை நேற்று நடைபெற்றது.

சாட்சி மேலும் தெரிவித்ததாவது:

நானும் காலஞ்சென்றவரும் கடந்த மூன்றும் திகதி மாவிட்டபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம்.

இராணுவ சென்றியிலிருந்து 500 யார் தூரத்துக்கு முன்பாக நாம் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொழுது சென்றியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து அதிபர் இரத்தம் பீறிட்ட நிலையில் சைக்கிளில் இருந்து கீழே சாய்ந்தார்.

தொடர்ந்தும் சூடுகள் வந்துகொண்டிருந்தன.

நான் கீழே விழுந்து படுத்து வேலிகளுக்குள்ளால் புகுந்து ஓடி மக்கள் வாழும் பகுதிக்கு வந்துசேர்ந்தேன்.

அங்குநின்ற போராளிகளிடம் நடந்த சம்பவம் பற்றித் தெரிவித்தேன்.

பின்னர் அவர்கள் அதிபரை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

இப்படி அவர் தெரிவித்தார்.

மரண விசாரணை தொடர்பான தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வீமன்காமம் மகா வித்தியாலய அதிபரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பொன்னையா யோசேப்பு தம்பிரத்தினம் 123880630Vஇலக்க முடைய அடையாள அட்டை இம்மாதம் 6-ந் திகதி யாழ்ப்பாணத்திற்கும், இணுவிலுக்கும் இடையில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது தவறிவிட்டது. கண்டெடுப்பவர் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

Rogens Cottage, Mcleod Hospital, Inuvil.

(1268)


## நிதி ஒதுக்கீடு

வட்டுக்கோட்டை, ஜூலை 8

வட்டுக்கோட்டை-சித்தன்கேணியில் நோர்வே நாட்டு உதவியுடன் கட்டப்பட்டு வரும் வட்டு. தொண்டேயம் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு மேலும் ஒன்றரை லட்சம் உதவி கிடைத்துள்ளது.

வட்டுக்கோட்டை லயன்ஸ் தலைவர் லயன் இ.விஜயரத்தினம் மேற்கொண்ட துரித முயற்சியால் 'நொராட்' ஸ்தாபனத்திடமிருந்து இந்த நிதி கிடைத்துள்ளது. இத்தொழிற்பயிற்சி நிலையக் கட்டடத்தை விரைவில் கட்டி முடித்து தொழிற் பயிற்சிகளை ஆரம்பிக்க இந்நிதி உதவும். (உ-161)

## அம்பாறைத் தொகுதி சிங்களக்கிராமவாசிகள்
### ஒரே இடத்தில் குடியமர்வு

கொழும்பு, ஜூலை 8

அம்பாறைத் தேர்தல் தொகுதியில் உள்ள சிங்களக் கிராமவாசிகள் எல்லாரும் ஒரே இடத்தில் குடியமர்த்தப்பட உள்ளனர்.

குக்கிராமங்களில் பாதுகாப்பு இன்றி வசிப்பதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் இத்திட்டம் தயாரிக்கப் பட்டிருப்பதாக அம்பாறை பொலீஸ் அதிபர் திரு. எஸ். எம். எச். பி. செனவிரத்தின தெரிவித்தார்.

தீவிரவாத தாக்குதல்களை சிங்களக் கிராம மக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பதற்கு இப்படி ஓர் இடத்தில் வாழ்வதே சிறந்ததாகும் என்று பொலீஸ் அதிபர் மேலும் தெரிவித்தார். (இ-எ)


## தேவை

தொடர்ந்தும் உங்களுக்கு சேவை செய்துவரும்

Green Peking Palace

ஸ்தாபனத்தாருக்கு கீழ்வரும் வேலைகளுக்கு உடன் ஆட்கள் தேவை

- Cooks
- Cashier
- Waiters

அனுபவம் வாய்ந்த, மாநகரசபைக்குள் வசிப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

நேரில் தொடர்புகொள்ளவும்:-

**Green Peking Palace**

69ப, 4th Cross Street,
JAFFNA.



உ
சிவமயம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

ஜெனனம்:- 21-06-1904

★

சிவபதம்;- 08-06-1987



**அமரர் கந்தையா தில்லைநாதன்**
(இளைப்பாறிய ஆங்கில ஆசான்)

எங்கள் குடும்ப விளக்கே! நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும் உம்நினைவு எம் நெஞ்சை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைவதாகுக.

09-06-1987 அன்று நடைபெற்ற அன்னாரினது ஈமக்கிரியைகளிற் கலந்துகொண்டு நம் குடும்ப விளக்கின் ஆத்மசாந்திச் சடங்குகளில் உறுதுணையாக உதவிய நண்பர்களுக்கும், கலந்து கொண்ட உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள், அபிமானிகள் யாவருக்கும், இன்று 08 - 07 - 87 அன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியச் சடங்குகளில் கலந்துகொள்ளும் அன்பர்கள் யாவருக்கும் எம்மிதயபூர்வமான நன்றிகளைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

கச்சாய் வீதி,
பெரியமாவடி,
சாவகச்சேரி.

திருமதி தில்லைநாதனும் மக்களும்

(1264)


நெடுங்கேணியில்

# கவனிப்பாரற்ற நிலையில் உள்ள 30 குடும்பங்கள்

நெடுங்கேணி, ஜூலை 8

நெடுங்கேணி நெல்சந்தைப்படுத்தும் சபைக் கட்டட அகதி முகாமிலிருக்கும் செட்டிகுளத்தைச் சேர்ந்த 30 குடும்பங்கள் அரசால் கைவிடப்பட்ட நிலையில் பரிதவிக்கின்றன.

இக்குடும்பங்கள் 85 ஆம் ஆண்டு நடைபெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டு செட்டிகுளத்திலிருந்து இடம்பெயர்ந்து நெடுங்கேணி வந்திருந்தனர்

இவர்களது முகாமுக்கு 9 மாதங்கள் மட்டுமே உணவு வழங்கப் பட்டது. அதன் பின்பு உணவும், முகாமிற்கான மின்சார, மருத்துவ குடிநீர் விநியோகமும் நிறுத்தப்பட்டன.

இக்குடும்பங்கள், தாங்கள் மீண்டும் செட்டிகுளம் சென்று குடியேற முடியாது என்று வவுனியா அரச அதிபருக்கும், நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபருக்கும் தெரிவித்துள்ளன.

இவர்கள் எதுவித தொழிலுமின்றி அன்றாட உணவுக்கே பெரும் கஷ்டப்பட்ட நிலையில் பட்டினியால் வாடுகின்றனர்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. (இ-எ 108)

மக்கள் முகம்

## கட்டட தொழிலாளர் சங்கம்

வட்டுக்கோட்டை, ஜூலை 8

சித்தன்கேணி கலைநகர் நேருஜி கட்டடத்தொழிலாளர் சங்க புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கே. வி. கனகசிங்கம், உபதலைவர். திரு.செ. ஐயாப்பிள்ளை; செயலாளர்; திரு. சு. பாலசிங்கம், உபசெயலாளர்: திரு.வி. வள்ளிகாந்தன், பொருளாளர்: திரு. அ. கந்தசாமி, பரிசோதகர்: திரு. க. இளந்திரையன்,

நிர்வாக உறுப்பினர்கள்: திரு. மா. கருணதேவதாசன், திரு. அ. இராசகோபால், திரு. ந. சிவமணி, திரு. ந. ஜெயராமன், திரு. ஆ. செல்வானந்தவேல், திரு, கு. திருச்சிற்றம்பலம்; திரு. தி. அருளானந்தசிவம். (இ-161)

## உணவுப் பார்சல்களும் எக்ஸ்ரே பரிசோதனையில்

கொழும்பு, ஜூலை 8

ஊழியர்கள் கொண்டு வரும் உணவுப் பார்சல்கள் எக்ஸ்றே கருவிப் பரிசோதனைக்கு உட்படுவதை எதிர்த்து இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனஊழியர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

கூட்டுத்தாபன நுழைவாயில் எஸ்ரே கருவி மேடையில் சகல பொதிகளும் வைக்கப்பட்டுப் பரிசோதிக்கப் பட்டே உள்ளே அனுமதிக்கப்படுகின்றன.

இந்தவகையில் ஊழியர்களின் உணவுப் பார்சல்களும் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன. (இ-எ)

வடமராட்சியிலிருந்து

## மேலும் 50குடும்பங்கள்

முள்ளியவளை, ஜூலை 8

கடந்தவாரம் மேலும் 50 குடும்பங்கள் வடமராட்சியில் இருந்து அம்பலவன், பொக்கணை வந்து சேர்ந்துள்ளன.

இதனை அடுத்து வடமராட்சி அகதிகள் எண்ணிக்கை 6 ஆயிரத்தைத் தாண்டியது.

இவர்களுக்கு முல்லைத்தீவுப் பிரசைகள் குழு இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை 20 மூடை அரிசி, 20 மூடை மா, சீனி, பால்மா, தேயிலை ஆகிய பொருள்களை வழங்கிவருகின்றது (இ-93)

## அதிபர் இடமாற்றத்தை ஆட்சேபித்து ஊர்வலம்

கொடிகாமம், ஜூலை 8

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபர் திரு. க. பேரம்பலம் இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து வித்தியாலய மாணவர்கள்- பெற்றோர்கள் திங்கட்கிழமை ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

வித்தியாலய முன்னாள் அதிபர் பண்டிதர் வித்துவான் பொன் கந்தையனார் இடமாற்றத்தை ஆட்சேபித்து உரையாற்றினார்.

இவ் வித்தியாலயத்தை மகா வித்தியாலயமாக்க முழு முயற்சி எடுத்து உழைத்தவர் இந்த அதிபர்.

இப் பாடசாலையைக் கொத்தணியாக அமைக்கும் பொருட்டு பட்டதாரி ஒருவரை நியமிக்க இருப்பதால் இவருக்கு இடமாற்றம் கிடைக்கிறது.

இவர் ஒரு பயிற்றப் பட்ட அனுபவம் மிக்க திறமை மிக்க அதிபர். இப்படி அவர் கூறினார்.

''பேரம்பலமே எமது அதிபர்' 'புதிய அதிபர் எவரும் வேண்டாம்' என்றசுலோகங்கள் பொறித்தஅட்டையை ஊர்வலக்காரர் வைத்திருந்தனர். (இ-75)


நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுத சுரபி
(வரையறுள்ளது)

## அன்னதான சபை
## விசேட அறிவிப்பு

அம்பிகையின் திருவிழா சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அம்பிகையைத் தரிசிக்கவருகின்ற அடியார்கள் அனைவருக்கும் வழமைபோல் சிறந்தமுறையில் சபையின் ''அமுதசுரபி'' மண்டபத்தில் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

நாட்டில் தற்போதுள்ள நிலைமை காரணமாக பணம், பொருள் சேகரிக்க சபை எவரையும் நியமிக்கவில்லை. அன்னதானத்துக்கு உதவ விரும்பும் அடியார்கள், அன்பர்கள் நயினை 'அமுதசுரபி' மண்டபத்திலும் சபையின் பொருளாளர் திரு. நா. சண்முகநாதன் (சுகபாணி ஸ்ரோர், உரிமையாளர்) 54, பலாலி ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலும் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்,

இங்ஙனம்

தங்கள் அன்புள்ள

க. வே. பரமலிங்கம், ஜே. பி.
கௌரவ காரியதரிசி

(1269)


## சபாநாயகர் ஈ. எல். லுக்கு இப்படி ஒரு கவலை
# தமிழருக்கு இடம் கொடுத்தது ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாகிவிட்டதாம்

கொழும்பு, ஜூலை 8

கூடாரத்துக்குள் நுழைய ஒட்டகத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது— இப்படிக் கூறும் அரபுப் பழமொழி ஒன்று உண்டு. தமிழருக்கு இந்த நாட்டில் வாழ இடம் கொடுத்ததால் சிங்களவருக்கு அந்த நிலைதான் ஏற்பட்டிருக்கின்றது.

சபாநாயகர் ஈ. எல். சேனநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டி சுவர்ணமாலி மகளிர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சபாநாயகர் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

வடபகுதி அரசியல்வாதிகள் தனிநாடு கோரிக்கையை முன்வைத்தனர். அதனை அடைய இளைஞர்களை ஆயுதப்போராட்டத்தில் இறங்கத் தூண்டிவிட்டனர்.

இளைஞர்களைத் தவறாக வழிநடத்திய கூட்டணியினர் இன்று எங்கே? தங்கள் 'பையன்களுக்கு' பயந்து மறைந்து அவர்கள் வாழ்கின்றனர்.

**சிங்கள இனம் யார்?**

நாட்டின் சரித்திரம் சரியான முறையில் இளம் சந்ததியினருக்குப் போதிக்கப்பட வேண்டும். தென்இந்திய திராவிட இனத்தின் வழித்தோன்றல் தான் சிங்கள இனம் என்று சிலர் கூறுகின்றனர். இது தவறான கருத்து. துரோகிகள் தான் இப்படிக் கூறுகின்றார்கள். வட இந்திய ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் சிங்களவர்கள்.

தமிழரின் ஆட்சியில் ஸ்ரீலங்கா என்றுமே இருந்தது இல்லை.

சில சிங்கள மன்னர்களின் கருணையினால் இந்தியாவில் இருந்து வந்த தமிழர்கள் அனுராதபுரத்தில் வாழ அனுமதிக்கப்பட்டனர்.

அப்போது நாட்டை ஆண்ட அரசர்களின் கீழ் அத்தமிழர்கள் உயர் பதவிகளையும் வகித்தனர்.

**அப்போதும் புரட்சி**

ஒரு முறை புவனேகபாகு மன்னனின் ஆட்சிக்கு எதிராக அப்போதைய தமிழ்த் தலைவர்கள் சிலர் புரட்சி செய்தார்கள். புவனேகபாகு மன்னன் உடனே தனது மகனான இளவரசன் சப்புமாலை அனுப்பினான். சப்புமால் சென்று புரட்சி செய்த தமிழர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தான்.

பின்னர் அத்தமிழர்களின் கைகளையும் கால்களையும் கட்டி அவர்களை இழுத்துச் சென்று அரசர் முன் நிறுத்தினான்.

இன்று கூடாரத்துக்குள் நுழைய ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாக தமிழருக்கு இடம் கொடுத்தது அமைந்துவிட்டது.

இப்படி திரு. சேனநாயக்கா தெரிவித்தார். (இ-எ)

## அவசரகாலச் சட்ட விதிகளை மாதாமாதம் புதுப்பிக்கும் நடைமுறை நீக்கப்படும்

கொழும்பு, ஜூலை 8

அவசரகாலச் சட்ட விதிகளை மாதாமாதம் புதுப்பிக்கும் தற்போதைய நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு தீர்மானித்துள்ளது.

விரும்பும் காலம்வரை அவசரகாலச்சட்ட விதிகளை அமுலாக்கக் கூடியதாக திருத்தம் ஒன்றை பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்துக்கு கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்போதைய சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி, மாதாமாதம் அவசரகாலச் சட்ட விதிகள் அமுலில் இருப்பதாகக் கூறும் பிரகடனம் ஒன்றை வெளியிட்டே ஆகவேண்டும்.

புதிய சட்டத்திருத்தம் இந்த நிபந்தனையை நீக்கும்.

ரத்துச்செய்யப்படுவதாகப் பிரகடனம் செய்யப்படும் வரை அவசரகாலச் சட்ட விதிகள் தொடர்ந்து அமுலில் இருக்கும்-

இப்படி உத்தேச சட்டத்திருத்தம் கூறுகின்றது.

இத்தகைய சட்டத் திருத்த மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட உள்ளது. (இ-எ)

## செய்திக்கொத்து

### 5 மாதத்துக்கு நிற்பார்களாம்

காங்கேசன்துறை, ஜூலை, 8

மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதியில் 5 மாதத்திற்கு இராணுவம் நிலைகொண்டிருக்குமாம்.

அங்கு சென்ற பெண் ஒருவரிடம் இராணுவத்தினர் இவ்வாறு கூறியதாகக் கூறப்படுகிறது. (இ-68)

### மில்க்வைற் அதிபர் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை 8

சங்கானைப் பகுதியில் உள்ள அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்துள்ள ஆயிரக் கணக்கான அகதிகள் குடும்பங்களுக்கு சவர்க்காரம். பாலர் வகுப்பு மாணவர்களுக்கான தமிழ் நெடுங்கணக்கு அட்டைகள், கொப்பிகள், புத்தகங்கள் முதலானவற்றை மில்க்வைற் தொழில்அதிபர் சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா அன்பளிப்புச் செய்துள்ளார். (இ-161)

### 7 மாதங்களுக்குப் பிறகுவந்த விறகு

யாழ்ப்பாணம், ஜூலை 8

வட்டுக் கோட்டை அரச மரக் கூட்டுத்தாபன விறகுஆலைக்கு கடந்த ஏழு மாதங்களின் பின் விறகு வந்துள்ளது.

ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இரண்டுதூக்கு வீதம் கூப்பன் அட்டைக்கு விறகு வழங்கப்படவுள்ளது (உ-எ)

### அரசநிவாரணம் வழங்கப்படுகிறது

சாவகச்சேரி ஜூலை 8

சாவகச்சேரி உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் அரசநிவாரணம் விரைவில் வழங்கப்படுகின்றன. சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஊடாகவழங்கப்படும் இந்நிவாரண உதவிகளை சுமார் 22ஆயிரம் குடும்பங்கள்வரை பெற்றுக் கொள்ளுமென நம்பப்படுகிறது. (இ-31)

### அகதிகள் இடம் மாற்றம்

சாவகச்சேரி ஜூலை 8

மட்டுவில் மகாவித்தியாலயத்தில் இடம் பெயர்ந்திருந்த அச்சுவேலிப்பகுதி அகதிகள் மட்டுவில் சிவன்கோவிலை அடுத்துள்ள உரக்களஞ்சியத்திற்கு இடம் மாறி உள்ளனர். (இ-31)

### சர்வோதயக் கிளை அகதிகளுக்குஉதவி

முள்ளியவளை, ஜூலை 8

முல்லைத்தீவு சர்வோதயக்கிளை அம்பலவன் பொக்கணையில் இருக்கும் வடமராட்சி அகதிகளுக்கு 25 மூடை அரிசி, 15மூடை மா, 3 பெட்டி பால்மா ஆகிய பொருள்களை வழங்கியது. (இ-93)

### கொடிகாமம் வந்த அகதிகள்

கொடிகாமம், ஜூலை 8

நெல்லியடியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதலை அடுத்து நூற்றுக்கணக்கான மக்கள் நெல்லியடி, அல்வாய், மந்திகை முதலான இடங்களிலிருந்து அகதிகளாக கொடிகாமம் பகுதிக்கு வந்தனர். (இ-75)

### குரு பூர்ணிமா விழா

யாழ்ப்பாணம், ஜூலை 8

எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள ராமகிருஷ்ணாலயத்தில் குருபூர்ணிமா விழா நடைபெறுகிறது.

மாலை 4 30 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

பஜனை, பூஜை, சொற்பொழிவு, இசை நிகழ்ச்சிகள் ஆகியவை இடம்பெறும். (இ)


பிரதேச அபிவிருத்தி அமைச்சுத்

## தமிழலுவற் பிரிவு

தமிழ் இலக்கிய, கலை, கலாசார கழகங்களைப் பதிவு செய்து அவை பற்றிய விபரங்களைத் தொகுத்துக் கொள்ளப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு முடிவு செய்துள்ளது.

எனவே தமிழ் இலக்கிய, கலை, கலாசாரக் கழகங்கள், மன்றங்கள் ஆகியன தம்மைப் பற்றிய விபரங்களைக் கீழ்க்காட்டியது போன்றதொரு படிவத்தில் அனுப்புமாறு வேண்டப்படுகின்றன; அனுப்ப வேண்டிய அஞ்சல் முகவரி:

தமிழலுவற் பணிப்பாளர்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
24 , காலி வீதி.
கொழும்பு—04.

அஞ்சலுறை மேல் இடதுபுற மூலையில் 'தமிழ்க்கலை மன்றம்' என்ற வாசகம் பொறித்திருத்தல் வேண்டும்.

ம. இராசநாயகம்,
தமிழலுவற் பணிப்பாளர்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
244. காலி வீதி,
கொழும்பு — 04.

**மாதிரிப் படிவம்**

**கலாசார சங்கங்களைப் பதிவு செய்தல்**

01. சங்கத்தின் பெயர்:-
02. சங்கம் நிறுவியநாள்:- [ஆண்டு, மாதம், நாள்]
03. சங்கப் பணியக அஞ்சல் முகவரி:-
04. சங்கத்தின் நோக்கங்கள்:-
05. சங்க உறுப்பினர் எண்ணிக்கை:-
06. இதுவரை நடந்த ஆண்டுப் பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கை:-
07. கடைசியாக ஆண்டுப் பொதுக்கூட்டம் நடந்த நாள்:-
08. சங்கம் ஆற்றும் பணிகள்:-
09. இதுவரை சங்கம் சாதித்தவை:-
10. சங்கக்கூட்டக் குறிப்புகள் ஆவணப் படுத்தப்பட்டுள்ளனவா:-
11. சங்கத்துக்கு வங்கிக்கணக்கு உண்டா:-
12. வங்கிக்கணக்கு உண்டாயின் வங்கிக் கிளையும், கணக்கு எண்ணும்:-
13. சங்கத் தலைவரின் பெயரும், அஞ்சல் முகவரியும்:-
14. சங்கச் செயலாளரின் பெயரும், அஞ்சல் முகவரியும்:-
15. சங்கப் பொருளாளரின் பெயரும், அஞ்சல் முகவரியும்:-
16. பிற விபரங்கள்:-

மேலே தந்துள்ள விபரங்கள் சரியானவையென உறுதிப்படுத்துகின்றேன்.

செயலாளர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

கடவுள் மனிதனை வழி நடத்துகின்றார். மனிதனோ தன்னைத் தானே தவறாக வழி நடத்திச் செல்கின்றான்.
— பகவான் அரவிந்தர்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805 22073
யாழ்ப்பாணம்.
08.07.1987 த.பெ.இல: – 23

## தீர்வுக்கு முட்டுக்கட்டை தலைவர்களின் துணிவின்மை!

இனப்பிரச்சினைக்கு உரிய, நியாயமான தீர்வைக் காண்பதற்குத் தடையாக, பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது என்ன?

நடைமுறைப்படுத்தக் கூடியதும், எந்த இனத்தையும் பாதிக்காததுமான ஒரு தீர்வைக் காண்பதற்குத் தடையாக இருப்பவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும், ஈரோஸ் இயக்கத்தினருமே. அவர்கள் முழுக்க முழுக்க இராணுவ அணுகுமுறையிலேயே நம்பிக்கை வைத்திருக்கிறாகள். அதனால் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கிறார்கள். அதுவே தீர்வு ஒன்றைக் காணுவதற்குப் பிரதான தடையாக இருக்கிறது. இப்படிக் கூறுகிறார் பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்திய விரோத அணுகுமுறை. இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்காமை. அக்கட்சியின் தவறான வெளி நாட்டுக் கொள்கை. இவையே பிரச்சினைக்குத் தீர்வு காணத் தடைகளாக இருக்கின்றன. இப்படிச் சொல்கிறார் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

ஒரே விடயத்தை தென்னிலங்கையைச் சேர்ந்த இரண்டு அரசியல் வாதிகள் இப்படிப் பார்க்கிறார்கள். முதலாமவர் அரசாங்கத்தின் முக்கிய பேச்சாளர். இரண்டாமவர் அரசு எதிரணியில் முதன்மையானவர்.

தமிழர்களின் உரிமைகளைச் சரிவர வழங்குவதற்கு அவர்களில் எவருக்குமே பூரணவிருப்பமில்லை, சக்தியில்லை, துணிவில்லை என்பது தான் உண்மையான காரணம்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அதற்கு மேலதிகமாகவும் ஒரு காரணம் உண்டு. இனப்பிரச்சினையைத் தனது பதவிக் காலம் முழுவதும் இழுத்தடிக்க வேண்டும். அதற்கு ஒரு தீர்வு வந்துவிட்டால் தென்னிலங்கையில் வேறு பிரச்சினைகள் உருவெடுக்கும். அவற்றுக்கு முகம் கொடுப்பது கஷ்டமாகிவிடும். இனப்பிரச்சினையை இழுத்தடித்தால், சிங்கள மக்களையும் ஏமாற்றி, ஆட்சியை வேறு சிரமம் எதுவும் இன்றி இன்னும் இரண்டு வருடங்களுக்கு நடத்தலாம் என்பது அந்தக் காரணம்.

தமிழர்கள் தமக்குச் சேரவேண்டிய உரிமைகளுக்கு அப்பாற்பட்டு எதையும் கேட்கவில்லை. ஆனால் அவற்றை வழங்கிப் பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டும் என நினைத்துச் செயற்படக் கூடிய துணிவு இரு சாராருக்கும் இல்லை.

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதால் சிங்கள மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும். ஆபத்து உருவாகும் என்ற மனப்பயம் சிங்கள மக்களிடையே உண்டு. அதனை வளர்த்தவர்கள் தென்னிலங்கை அரசியல் வாதிகள் தான்.

தமது அரசியல் லாபத்துக்கும், தேர்தல் வெற்றிக்கும் தமிழர்களைப் பகடைக் காய்களாக்கிய பாவத்தில் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் எல்லோருக்குமே (ஏதோ ஒரு விதத்திலாவது) பங்குண்டு.

சிங்கள மக்களின் நியாயத்தை உணராத தன்மையும், தேவையற்ற பயமுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முதல் முட்டுக்கட்டை. இதை மறந்தவர்களாக தென்னிலங்கை அரசியல் வாதிகள் நடந்து கொள்கின்றனர்.

தமிழர்களின் உரிமைகளை வழங்கச் சிங்கள மக்களினதும், பௌத்த குருமாரினதும் ஆதரவு எந்த ஆட்சியாளருக்கும் தேவை என்ற நிலை உண்டு. அவர்களுக்கு அஞ்சி அஞ்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்கினால் தமது அரசியல் செல்வாக்குச் சரிந்து விடுமோ என்று தென்னிலங்கைத் தலைவர்கள் ஒன்றுக்குப் பல விதம் அஞ்சுகிறார்கள்.

டிசம்பர் 19 யோசனையை முன் வைத்த ஸ்ரீலங்கா அரசு, பின்னர் அதிலிருந்து பின்வாங்க முயற்சித்தமை அந்த அச்சத்தைப் பிரதிபலிக்கும் ஒரு நல்ல உதாரணம்.

ஜே. ஆர். இல்லாமல் சிறிமாவோ பதவியில் இருந்தாலும் அந்த அச்சம் நிச்சயம் அவருக்கும் வந்திருக்கும்.

ஆகையால் தென்னிலங்கை அரசியல் வாதிகள் எவராக இருப்பினும், தமிழர்களின் நியாய பூர்வமான உரிமைகள் வழங்கப்பட வேண்டியதின் அவசியத்தை தமது மக்களுக்கு துணிவுடன் விளங்கப்படுத்த வேண்டும். தாம் முன்னர் விதைத்த துவேஷ விதையால் முளைத்த தருக்களைக் களைந்து எறிய வேண்டும். அது மிகவும் கஷ்டமான காரியம்தான். எனினும் வினை விதைத்தவன் அதனை அறுத்துத் தானே ஆகவேண்டும்?

இனப்பிரச்சினை தீராமல் இருப்பதற்கு சுற்றிவளைத்துக் காரணம் கற்பிக்கும் தென்னிலங்கைத் தலைவர்கள் முதலில் செய்ய வேண்டியது நாம் மேலே கூறிய காரியமே. செய்வார்களா?

# பஞ்சாப்பில் 40 பஸ் பயணிகள் சுட்டுக் கொலை!

சண்டிகார், ஜூலை 7

சீக்கியத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 40 பஸ் பயணிகள் உயிரிழந்தனர். முப்பது பேர் படுகாயமடைந்தனர்.

பஞ்சாப் மாநிலத்தில் சண்டிகார்—அம்பல வீதியில் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றின் மீது திங்கள் இரவு இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

ரிஷிகேசத்தை நோக்கி பஸ் சென்றுகொண்டிருந்தது.

காரில் பின் தொடர்ந்த கோஷ்டி ஒன்று பஸ்ஸை வழிமறித்தது.

பின்னர் பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

30 பயணிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். பத்துப் பேர் ஆஸ்பத்திரியில் மரணமானார்கள்.

சீக்கியத்தீவிரவாதிகள் பயன்படுத்திய தாகக் கூறப்படும் கார் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

காரினுள் ஒரு சடலம் கிடந்தது. அச்சடலம் தீவிரவாதியினுடையதாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.

பயணிகளைச் சுடும் போது இவரும் தவறுதலாகச் சூடுபட்டு மரணமாகி இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

இப் பயங்கரப் படுகொலையைத் தொடர்ந்து, பஞ்சாப் ஹரியானா மாநிலங்களின் எல்லை மூடப்பட்டது. சம்பவம் நடந்த இடத்திற்கு பஞ்சாப் மாநில கவர்னர் சித்தார்த்த சங்கரேயும் பொலீஸ் அதிபர் ரினபரோவுடன் விரைந்து சென்றனர்.

பஞ்சாப், ஹரியானா மாநிலங்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளன. (இ-எ)

## தி.மு.க எம்.எல். ஏக்களின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது

புதுடில்லி, ஜூலை 7

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க அனுமதி அளிக்கும்படி கோரி பதவி நீக்கம் செய்யப்பட்ட பத்து தி. மு. க. எம். எல். ஏக்கள் தாக்கல் செய்த மனுக்களை புதுடில்லி உயர் நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

இந்திய எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு கட்டமாக தி.மு.க அரசமைப்புச் சட்ட எரிப்பில் ஈடுபட்டது.

அதில் பங்கு பற்றி சட்டத்தை எரித்ததற்காக பத்து தி.மு.க எம்.எல். ஏக்களை தமிழ் நாடு சட்டசபை, தீர்மானம் ஒன்றின் மூலம் வெளியேற்றி விட்டது.

இதை எதிர்த்து செய்யப்பட்ட அப்பீல் புதுடில்லி உயர் நீதி மன்றத்தின் 5 நீதியரசர்கள் குழு முன் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க அனுமதி தரும்படி கோரி இப் பத்து தி.முக. எம். எல். ஏக்களும் செய்து கொண்ட மனுக்களையே புதுடில்லி உயர் நீதிமன்ற நீதியரசர் எம்.எம். தத் தளளுபடி செய்தார். (இ-எ)

## படகு கவிழ்ந்து 300 பேர் மரணம்!

லுஸாக்கா, ஜூலை 7

பயணிகளுடன் வந்த பெரிய படகு ஒன்று கவிழ்ந்ததில் மூந்நூறு பேர் மரணமாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

சாம்பியாவின் வடபகுதியில் உள்ள பெரிய ஆறு ஒன்றில் இவ்விபத்து சுடந்த திங்கள் இடம் பெற்றது.

இது வரை 23 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 80 பேர் வரையில் உயிர் தப்பினர்.

முந்நூறுபேர்வரையில் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

ஸாயர் நாட்டுக்கும், ஸாம்பியாவுக்கும் இடையேயான எல்லைப் புறத்தில் இந்த ஆறு உள்ளது. (இ-எ)

## எல்லைக் காந்தி உடல் நிலையில் மாற்றம் இல்லை

புதுடில்லி. ஜூலை7

எல்லைக் காந்தி அப்துல் கபார் கான் இன்னும் அறிவு மயங்கிய நிலையிலேயே இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

91 வயதான எல்லைக் காந்தி கடந்த சனிக்கிழமை திடீரென்று பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மயக்கம் இன்னும் நீங்கவில்லை.

## அமெரிக்காவின் பெரும் தவறு

தெஹ்ரான், ஜூலை 7

தனது தேசியக் கொடியுடன் செயல்படுகுவைத் நாட்டு எண்ணெய்க் கப்பல்களுக்கு அனுமதி வழங்குவதன் மூலம் அமெரிக்கா பெரிய தவறு ஒன்றைவிடுகிறது இப்படி ஈரான்சபா நாயகா எச்சரிக்கைசெய்தார்

## சோவியத் அணுகுண்டு பரிசோதனை

மாஸ்கோ, ஜூலை 7

சோவியத் யூனியன் அணுகுண்டு பரிசோதனை ஒன்றை கடந்த திங்கள் நடத்தியது.

நிலத்துக்கு அடியில் இப்பரிசோதனை நடத்தப்பட்டது.

பெப்ரவரி மாதத்தின் பின்னர் சோவியத் யூனியன் நடத்திய எட்டாவது அணுக்குண்டுப் பரிசோதனை இதுவாகும்.

ஹிரோஷிமாவில் போட்ட அணுக்குண்டின் சக்திக்கு ஒப்பான குண்டே பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.(இ-எ)

## விழிப்புலன் அற்றோர் சத்தியாக்கிரகம்

புதுடில்லி, ஜூலை 7

இந்திய விழிப்புலன் அற்றோர் சங்க உறுப்பினர்கள் கடந்த திங்கள் புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியின் இல்லத்தின் முன்னால் சத்தியாக்கிரகம் செய்தனர்.

விழிப்புலனற்றோர்களை சமூகத்தில் முக்கிய இடம் கொடுத்து கௌரவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து இந்த இயக்கம் நடத்தப்பட்டது.

நாடாளுமன்றம், சட்டசபைகள், உள்ளூராட்சிச்சபைகள் ஆகியவற்றில் விழிப்புலனற்றோருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

## வெளி உலகில்

## மேலும் 6 வருடங்கள் முபாரக் கடமையாற்றுவார்

கெய்ரோ, ஜூலை 7

அடுத்த ஆறு வருடங்களுக்கு ஜனாதிபதியாகப் பணியாற்றும்படி ஜனாப். ஹோஸ்னி முபாராக்கை எகிப்திய நாடாளுமன்றம் கேட்டுள்ளது.

ஆளும் தேசிய ஜனநாயகக் கட்சி ஜனாப் முபாராக்கை மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக நியமித்துது.

அந்த நியமனத்தை எகிப்திய நாடாளுமன்றம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

நாடாளுமன்றத்தின் முடிவை ஜனாப் முபாராக்கும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இவர் மட்டுமே ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுகிறார்.

அக்டோபரில் இந்த நியமனத்தை அங்கீகரிக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும். (இ-எ)

## தென் கொரியாவில் அரசியல் சீர்திருத்தம்

சோல், ஜூலை 7

அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளை அமுல் நடத்துவதற்கு தென் கொரிய அரசு ஆரம்பித்துள்ளது.

சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதில் அரசு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.(இ-எ)

## சமய சந்நிதிகளில்

### பத்திரகாளி அம்மன் உற்சவம்

திருநெல்வேலி, ஜூலை 8

திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

கடந்த காலங்களில் பத்துத் தினங்களாக இருந்த உற்சவம் இம் முறை பதினைந்து தினங்களாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

27 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பரத் திருவிழாவும், 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 29 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்த திருவிழாவும் 30 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறும். (இ-143)

### திருவிளக்குப் பூசைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 8

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரு ஆலயங்களில் திருவிளக்குப் பூசைகள் நடைபெற உள்ளன.

விவரம் வருமாறு:

மாலை 5 மணிக்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலயத்தில் 24 ஆவது தீபலக்ஷ்மி பூசை நடைபெறும்.

மாலை 6-45 மணியளவில் மானிப்பாய் சோதிவேம்படி ஒழுங்கையில் உள்ள ஸ்ரீ காளி அம்மன் கோயிலிலும் தீபபூசை நடைபெறும். (இ-எ)

### மஹா கும்பாபிஷேகம்

யாழ். நீராவியடி கடையிற்சுவாமி சமாதி சிவாலயத்தில் புதிதாக தெட்சணாமூர்த்தியும், நவக்கிரகங்களும் ஸ்தாபிக்கப்பட்டு,

இன்று 8 ஆம் திகதி அதிகாலை 6 மணியளவில் நூதனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

கடையிற்சுவாமிகள் ... இந்த புதிய கோவில் கட்டப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

# இராணுவ மோதலைத் தவிர்த்த கொழும்பு - டில்லி உடன்பாடு

இந்தியாவின் படியிறக்கம்— இத்தலைப்பில் புரொண்ட்லைன் ஜூன் 27– ஜூலை 10 இதழில் வெளியான கட்டுரையின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

மனோஜ் ஜோஷி புதுடில்லியில் இருந்து இக்கட்டுரையை எழுதியிருக்கின்றார்.

நிவாரண உதவிகளை வழங்குவது சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் இடையே உருவான ஜூன் 15 உடன்பாடு தீர்வு கண்டது.

இராணுவ மோதலின் விளிம்புக்கே இரண்டு தென் ஆசிய நாடுகளைக் கொண்டு சென்ற 2½ வாரகால நெருக்கடியின் உச்சக்கட்டம் தணிந்தது.

மே 26 இல் ஸ்ரீலங்கா அரசு ஆரம்பித்த ஒப்பரேஷன் லிபரேஷன் தான் இந்த நெருக்கடிக்குக் காரணம்.

### இந்தியாவுக்கு கவலை தந்த விவகாரம்

பொதுமக்களின் உயிரிழப்பைக் கிஞ்சித்தும் கவனியாமல் இந்த இராணுவத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. விமானத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்கள் இந்தியாவுக்கு பலத்த கவலையை ஏற்படுத்தின.

இதைத் தொடர்ந்து இந்தியா, ஸ்ரீலங்காவுக்கு உணர்ச்சி பூர்வமான வேண்டுகோளை விடுத்தது.

பிரதமர் காந்தியே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கடுமையான மொழியில் இந்த வேண்டுகோள் அமைந்து இருந்தது. புதுடில்லியின் மனோநிலை அதில் தெரிந்தது.

எப்படியாயினும், என்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவு ... வாகக் காணப்பட்டது

தலையிடும் நடவடிக்கையில் ஏற்படக்கூடிய சர்வதேச பிரதிபலிப்புக்கள் பற்றி இந்திய அரசு ஆழ்ந்த கவலைப்பட்டது.

### மார்ச் மாதத்தில்

யாழ்குடா நாடு மீது போடப்பட்ட பொருளாதார முற்றுகையை மீறி தன்னிச்சையான முறையில் உணவுப் பொருள்களை அனுப்புவது பற்றி மார்ச்மாதத்தில் இந்திய அரசு வட்டாரங்களில் பேச்சடிபட்டது.

பின்னர் அதுபற்றி ஒன்றுமே வெளிவரவில்லை.

விமானம் மூலம் உணவுப் பொதிகளை போடும் திட்டம் பற்றியும் மார்ச்சில் பேசப்பட்டது. எல்லைப்புறத்தில் பாகிஸ்தானுடன் ஏற்பட்ட மோதல் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுத்து விட்டது.

யாழ் நிலைமை மேலும் மோசமானது. தரையில் ஸ்ரீலங்கா அரசுப்படைகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய நிலைமை தெளிவாயிற்று.

குடாநாட்டில் அரசுப் படைகளின் பலம் அதிகரிக்கப்பட்டிருந்தது.

பத்தாயிரம் முதல் இருபதினாயிரம் வரை துருப்புக்கள் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது.

### தமிழகத்தில் அரசியல் சூடு

அடக்கு முறையும் பொதுமக்கள் உயிரிழப்பும் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் அரசியல் சூட்டை ஏற்படுத்தின.

முதலமைச்சர் இராமச்சந்திரன் விமானம் மூலம் புதுடில்லி வந்தார்.

இராணுவத் தாக்குதலை நிறுத்தும்படி ஸ்ரீலங்காவை நிர்ப்பந்திக்கும் படியும், பொருளாதார முற்றுகையால்

(4-ஆம் பக்கம் பார்க்க)



## பொய்யாமொழி

**குறள்:**

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்.

**பொருள் :**

(செய்யும் வழிவகைகளைக்) குறைவில்லாமல் எண்ணித் தக்க இடத்தில் பொருந்திச் செய்தால், அஞ்சாமை அலலாமல் வேறு துணை வேண்டியதில்லை.

## விசித்திரம்

தம்பி முரளியே வந்நாச்சுப் போலை! என்ன, புதிசா சங்கதியள் சமாச்சாரங்கள் எதுவும் இருக்குதோ அல்லது வழமையான வழவழாத் தானோ...!

நெல்லியடித் தாக்குதலோடை அச்சாணியார் ஒரு பெரிய புதிய கண்டுபிடிப்பு ஒண்டை அவிட்டுவிட்டிருக்கிறார் பாக்கயில்லையே. அதாவது ''ஒப்பறேஷன் லிபறேஷன்'' மூலம் கைப்பற்றின பகுதியளை ஸ்திரப்படுத்தி வெற்றியை நிலைநாட்டக் கன காலம் எடுக்கும் எண்டதை இப்ப அவர் உணர்ந்திட்டார்.

வடமராட்சியை ஆக்கிரமிப்புச் செய்த உடனை உப்பிடியே அவர் கதைச்சவர்? பித்தம் தலைக்கேறின மாதிரி தங்கடை வெற்றி நிரந்தரமான வெற்றி எண்டும், அது நிலைப்படுத்தப்பட்டு விட்டதாகவும், அது போலை குடாநாடு முழுவதையும் தன்னால் அடுத்த ''ஒப்பறேஷன்கள்'' மூலம் அப்பிக் கொள்ள முடியும் எண்டும் குப்பை மேட்டிலை நிண்டு கத்திற கோழி மாதிரிக் கத்தினார். இப்ப நாடி விழுந்த நிலையிலை குரலை நல்லாத் தாழ்த்திப் போட்டார். பித்தம் முறிஞ்சு போச்சுதோ என்னவோ...?

தென்னிலங்கையிலை இப்ப பித்த வியாதி அதிகமாம். பலபேருக்குப் பித்தம் தலைக்கேறி மூளைக் குழப்பமே வந்திட்டுதாம்.

இஞ்சை தமிழ்ப் பகுதியளில தமிழ்ச் சனங்களுக்குச் செய்யிற அநியாயத்துக்குப் பதிலாய்த் தான் அங்கை உப்பிடி ஒரு தாக்கமோ ஆருக்குத் தெரியும்.

பித்த வியாதி முத்தித்தானே பைத்தியமவாறது. அப்பிடிப்பைத்தியம் வந்தவை இப்ப ஆஸ்பத்திரியளிலை இருந்து வெளிக்கிட்டு ஓடினம் எண்டும் சொல்லுகினம்!

அப்பிடியெண்டால் அங்காலைப் பக்கத்தாலை அரசியல் வாதியளின்ரை எண்ணிக்கை செதியிலை கூடும் எண்டு சொல்லலாம்!!

ஏனெண்டால் இப்ப அங்காலைப்பக்கத்து அரசியல் வாதியளிலை அனேகமானவைக்கு உந்த வியாதி இருக்கு. எத்தனையோ முக்கியமான விஷயங்களிலை எல்லாம் அவை பைத்தியகாரர் மாதிரித்தானே அலம்புகினம்.

சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவின் தலையை ஒரு தடவை சோதிக்கவேணும் எண்டு அதி உத்தமர் சொல்லி இருக்கிறார். தேர்தல் நோய் பிடிச்ச அவ, தேர்தலைக் கண்காணிக்கச் சர்வதேசக் குழு வேணும் எண்டு கேட்ட உடனை, அவவுக்கும் பைத்தியம் பிடிச்சிட்டுது எண்டு அதி உத்தமர் நினைக்கிறார்.

ஆனால் அவர் மேடைக்குமேடை பேசிறதைக் கேட்டால் சந்தேகம் அடுத்த பக்கத்தாலை வருகுது.

★ ★ ★

வடமராட்சியிலை சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வாற திட்டத்தின் மூலம் பல தமிழ் அரசாங்க ஊழியருக்கு வாயிலை மண்போடிற வேலையும் நடக்குதாம்.

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்திலை வேலை செய்த பல அரச ஊழியர்கள் வடமராட்சிப் பகுதிப் பொலீஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கினம் ஆனால் அவையிலை பல பேர் பிச்சை வேண்டாம்நாயைப்பிடி எண்ட நிலையிலை தங்கடை பதவியளிலை இருந்து பென்சன் எடுக்கப் போகினம் எண்டு கேள்வி!

- கொண்டோடி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்பட பிரதிகள்,
★ சம்பூட்டர் முறையில்,
★ குறைந்த செலவில்,
★ சிறந்த சேவையில்,
பெற்றுக் கொள்ளலாம்.

உதயன்

08-07-1987 புதன்கிழமை

★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/-மட்டுமே.
★ நெகடிவ் (Processing) செய்தல் இலவசம்.
★ விற்பனை - வர்ண நிழற்பட சுருள்கள்
KODAK - FUJI - KONICA
TU OR - FORTE
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்,
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நெல்லியடியில் ஷெல் தாக்குதல்களில் சிக்கி

# புகைக்கூண்டுக்குள் தஞ்சம் புகுந்த இந்திய செஞ்சிலுவைப் பிரதிநிதிகள்

## இரண்டு நாள் உணவின்றி தண்ணீர் மட்டும் குடித்த அனுபவம்

— அலுவலகச் செய்தியாளர்:- கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஜூலை 8 ஞாயிறு இரவு நெல்லியடியில் நிகழ்ந்தமோதலையடுத்து அப்பகுதியில் படையினர் கடும் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இந்த ஷெல் தாக்குதல்களுக்கு மத்தியில் சிக்கிக் கொண்ட இந்திய, ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், வீடொன்றில் சமையலறையின் புகைக் கூண்டுக்குள் தஞ்சம் புகுந்து கொண்டனர்.

வடமராட்சியில் இந்திய நிவாரண உணவுப் பொருள் விநியோகத்தைப் பார்வையிடுவதற்காகச் சென்ற குழுவே இப்படித் தாக்குதலுக்கு மத்தியில் சிக்கிக் கொண்டது.

நேற்று நண்பகல் வடமராட்சியிலிருந்து இக்குழுவினர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

தமக்கு ஏற்பட்ட அனுபவம் குறித்து செஞ்சிலுவைச் சங்க இந்தியப் பிரதிநிதி ஒருவர் கூறியதாவது:-

இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளாக நாம் இருவரும், ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பிரசைகள் குழுவினர்சார்பில் ஒவ்வொருவரும் வடமராட்சி சென்றோம்.

நெல்லியடியில் பிரசைகள் குழுவின் ஒன்றியத்தைச் சேர்ந்த திரு. ஜே. எஸ். இராஜேந்திரன் என்பவரின் வீட்டில் தங்கினோம்.

இந்த வீடு நெல்லியடி இராணுவமுகாமிலிருந்து சுமார் கால் மைல் தூரத்தில் உள்ளது.

### வாழ்நாளில் கேட்டதில்லை

ஞாயிறு இரவு பெரும் வெடிச் சத்தம் எம்மை அதிர வைத்தது. இது போன்ற சத்தத்தை நாம் எமது வாழ்நாளில் கேட்டதே இல்லை.

அப்பகுதியில் தீவிர ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நாம் பயத்தினால் வீட்டின் புகைக் கூண்டுக்குள் ஒளித்தோம்.

இரு நாட்கள் உணவின்றி கஷ்டப்பட்டோம் தண்ணீரைக் குடித்துச் சமாளித்தோம்.

அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதாலும்–

உணவு மற்றும் வசதிகள் இல்லாததாலும்–

அப்பகுதி மக்கள் வடமராட்சிப் பகுதியை விட்டு வெளியேறி வருவதாலும் நாமும் அங்கிருந்து வெளியேறி யாழ் வந்து சேர்ந்தோம்.

வடமராட்சியில் நடந்த ஹெலிக்கொப்டர் தாக்குதல்களையும் நாம் கண்ணால் பார்த்தோம்.

இத்தனைக் கஷ்டங்களுக்குள் எப்படித்தான் தமிழ் மக்கள் தமது வாழ்க்கையைக்கொண்டு நடத்தப் போகின்றார்கள் என்பதுதான் எமக்குத் தெரியவில்லை?

—இப்படி அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

## முகாமிலிருந்து--

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

வீமன்காமம் பிரசைகள் குழுப் பிரமுகருமான திரு. முத்தையா சிவராசா (வயது 53) கடந்த வெள்ளிக்கிழமை இராணுவ உயர் அதிகாரியின் அனுமதியுடன் வெள்ளைக் கொடியுடன் வீமன்காமம் மகா வித்தியாலயத்துக்கு சென்று கொண்டிருந்த பொழுது சுடப்பட்டார்.

பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த அவர் நேற்று மரணமானார். (இ–10)

## ஹெலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தினர்.

இதைத் தொடர்ந்து சம்பவம் நடந்த இடத்துக்குச் செல்லாமலே சப்டன் குப்தா கொழும்பு திரும்பினர். (இ-எ)

## வீர மரணமடைந்த விடுதலைப் புலிகள்

நெல்லியடி மோதலில் வீர மரணமடைந்த விடுதலைப் புலிகளின் படங்கள் இவை.

இடது புறத்தில் காணப்படுவது பிளாக் டைகர்ஸ் (கரும் புலிகள்) படைப் பிரிவில் முதலாவதாக வீர மரணம் அடைந்த காப்டன் மில்லரின் (வசந்தன் – துன்னாலை)படம்.

முன்னாள் பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினத்தின் மகனும், விடுதலைப் புலிகள் அமைப்பின் சிரேஷ்ட அங்கத்தவருமான மேஜர் கமலின் (து. வ. பரமேஸ்வரராசா – வல்வெட்டித்துறை) படத்தை வலது புறத்தில் காணலாம்.



காப்டன் மில்லர்



மேஜர் கமல்

## இந்தியக் கப்பல்களை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வரவேற்கின்றனர்.

விமானம் மூலம் உணவுப் பொதிகளை யாழ்ப்பாணத்தில் போட்ட செயலை நாம் ஒரு எச்சரிக்கையாகக் கருதவேண்டும்.

அது பிரதமர் ராஜீவ் விடுத்த அச்சுறுத்தலாகவும் கருதப்பட வேண்டும்.

உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து விநியோகிக்க இந்தியாவை அனுமதிப்பதா? அப்படி அனுமதித்தால் அப் பிரதேசத்தை இந்தியாவிடம் ஒப்படைத்துவிட்டதாகவே கருதப்படும்.

— இப்படி பிரதமர் தெரிவித்தார். (உ-எ)

## வடமராட்சியில்...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

பகிரங்கமாகக் காணப்படாத போராளிகள் நேற்றுப் பல வீதிகளில் ஆயுதங்களுடன் காணப்பட்டனர்.

புலிகளின் நடமாட்டம் அதிகரித்ததை அடுத்து நேற்று பண்டாரிலும் பொலிகண்டியிலும் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் 5 ஹெலிக்கொப்டர்களில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர்.

போராளிகளுடன் மோதல்கள் இடம்பெற்றிருப்பதாகவும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் அப் பகுதியிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கின்றனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ–ள)

அறிவித்தல்

நாவற்குளி கண்ணாடித் தொழிற்சாலை வேலைகள் அரியாலை அரஸ்கோ கட்டடத்தில் விரைவில் ஆரம்பமாக உள்ளது. நாவற்குளிதொழிற்சாலையில் கடமையாற்றிய சகல ஊழியர்களையும் இம்மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள புதிய தொழிற்சாலைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

'த பெனின்சுலா குறூப்'
மகேந்திரா
கண்ணாடித்
தொழிற்சாலை
(அரஸ்கோ கட்டடம்)
163, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(1271)

## நீத்தார் பட்டியல்



### திரு. முத்தையா சிவராசா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. முத்தையா சிவராசா அகால மரணமானார். இவர் வீமன்காமம் மகாவித்தியாலயத்தின் அதிபரும், காலஞ்சென்ற முத்தையா, தையல்நாயகி அவர்களின் அன்பு மகனும், இரதிதேவியின் அன்புக் கணவரும், யாதவன், சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம், தயாபரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பள்ளியவத்தை அளவெட்டி வடக்கு, கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலருகாமையில் 8ம் திகதி இன்று புதன் கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும்.

மல்லாகம் மகா வித்தியாலயத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், பொதுமக்களின் அஞ்சலிக்காக, பூதவுடல் பிற்பகல் 1-30 மணிக்கு வைக்கப்பட்டு, 3-00 மணிக்கு அங்கிருந்து அளவெட்டி குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் கொடுப்போர்:
துணைவேந்தர்,பேராசிரியர் சு. வித்தியானந்தன்
(மைத்துனர்)

## நயினை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரின் ஆலோசனையுடனேயே படகு சேவை நடத்தப்படுவதாகவும் ஆலயத்தில் அறங்காவலர் சபைத் தலைவர் திரு. த. குலசேகரம் தெரிவித்தார்.

ஆலயத்துக்கு வருவோர் தம்முடன் அடையாளக் கார்ட்டையும் எடுத்துவருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (உ)

## அங்கங்களை....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கிறது.

சிப்பாய்கள் நிலை கொண்டிருந்த இரு கட்டடங்களும் முற்றாகத் தகர்ந்துள்ளன.

அவற்றினிடையே கிடக்கும் சிப்பாய்களின் ஆயுதங்களை மீட்கும் முயற்சியில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

முகாமைச் சுற்றியுள்ள சுமார் 25 வீடுகள் அதிர்ச்சியினால் சுவர்கள் வெடித்த நிலையிலும், கதவுகள் விழுந்த நிலையிலும், ஓடுகள், கண்ணாடிகள் சிதறிய நிலையிலும் காணப்படுகின்றன.

இறந்த ஒரு சிப்பாயின் விரல்களுடன் கூடிய கை ஒன்று 150 யார் தூரத்திலுள்ள மகாவித்தியாலய மைதானத்தில் தூக்கி வீசப்பட்டிருந்தது.

தாக்குதல் சம்பவம் நடந்தபோது சிப்பாய்களால் முகாமைச் சுற்றிலும் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் அதிர்ச்சியால் வெடித்தன.

இதனால் முகாம் வளவிற்குள் இருந்த பல மரங்களும் வாழைகளும் முறிந்து விழுந்தன.(இ-ள-160)

## வதிரியில் ஷெல்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து இந்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அல்வாய், வதிரி, கொற்றாவத்தை, திக்கம், நவிண்டில் பகுதிகளில் விழுந்த ஷெல் குண்டுகளால் பல வீடுகள் சேதமடைந்தன.

வதிரி 'பொம்மேர்ஸ்' மைதானத்திற்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றில் விழுந்து வெடித்த ஷெல் குண்டாலேயே இரு வயோதிபர்கள் இறந்தனர். சீ. இராசம்மா (வயது 65), ஐ. துரையப்பா (வயது 71) ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

இவர்களுடன் கூட இருந்த பருத்தித்துறையைச் சேர்ந்த அகதியான வயோதிப மாது ஒருவர் காயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த வீட்டின் உரிமையாளர் ஆசிரியர் மகேஸ்வரன். இவரின் குடும்பத்தினர் ஏற்கனவே இடம்பெயர்ந்து ஆலயமொன்றில் தங்கியிருந்ததால் தப்பிக்கொண்டனர்.

வீட்டில் இருந்த நாய் ஒன்றும் ஷெல் தாக்குதலில் பலியானது. (இ-ள-160)

## இராணுவ---

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட யாழ் தமிழருக்கு நிவாரண உதவிகளை வழங்கும்படியும்திரு.இராமச்சந்திரன் பிரதமரிடம் வலியுறுத்தினர்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பிரச்சினைகளினால், முதலமைச்சரின் உணர்ச்சியை புதுடில்லியில் எவரும் உற்றுக் கேட்டது பரிசீலனைக்கு எடுத்தது பற்றித் தெளிவாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தின் மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட இராணுவத் தாக்குதலைத் தொடர்ந்து இப்பிராந்தியம் சம்பந்தமான இந்தியக் கொள்கையின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

செயலற்று இருப்பதை கையாலாகாத் தன்மையாகத்தான் கருத வேண்டும்.

தனது வாசல் படியில் உள்ள ஒரு பிரச்சினை குறித்து அப்படி ஒரு எண்ணத்துக்கு ஆளாவதற்கு இந்தியா இடங்கொடுக்க முடியாது.

ஜூன் முதலாம் திகதி இந்தியா தீடீர் என்று அறிவித்தது.

படகுகள் மூலம் உணவுப் பொருள்களை பட்டினி கிடக்கும் யாழ் மக்களுக்கு அனுப்பப் போகின்றோம்— இதுவே இந்தியாவின் திடீர் அறிவித்தல். (இ-எ)

[ வளரும் ]

பிரயாண ஒழுங்குகள்
HORIZON ENTERPRISES

★ குவைத் ★ சவூதி
★ டுபாய் ★ மாலைதீவு

ஆகிய நாடுகளுக்கான வேலைவாய்ப்புடன் செல்ல விரும்புவோர் எம்மிடம் லேபரர், கிளீனர் முதல் நிர்வாகப் பொறுப்பாளர் வரை அனைத்து வேலை வாய்ப்புடனும் மிக அதிகளவிலான வெற்றிடங்கள் உள்ளமையால் உடன்தொடர்பு கொள்ளவும்.

ஏற்கனவே வெளிநாட்டில் டிறைவிங் வேலை செய்தவர்களுக்கு குவைத் நாட்டிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எமது முகவர் நிலையத்தினால் சென்ற வாரமும் இவ்வாரமும் பயணம் மேற் கொண்டோர் பெயர் விபரம்:

1. குமாரசாமி தில்லைநாதன், இல 21 சுப்பிரமணியம் வீதி, அரியாலை.
2. ஜோர்ஜ் சோசப் வைரவர் கோவிலடி, மட்டுவில் வடக்கு,சாவகச்சேரி.
3. தங்கமயில் பத்மநாதன், வண்ணான்குளம், முல்லைத்தீவு.
4. கந்தையா சின்னத்தம்பி, புலோலி தெற்கு, புலோலி.
5. கனகராஜா திருஞானவதி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
6. சோமசுந்தரம் சோமாதேவி, சூழாவடி கிழக்கு ஒழுங்கை, ஆனைக்கோட்டை.
7. சின்னவன் அகிலேசன் குமாரசாமி, தாவளை இயற்றாலை, வரணி.
8. இராஜேந்திரம் யோகநாதன், பணிப்புலம் சுழிபுரம்.
9. பாவிலு அன்ரன் யேசுராசா, நல்லையன் வீதி, இளவாலை
10. எட்வின் பெரேரா வின்சன் பெரேரா, பாடசாலை ஒழுங்கை, வண் வட மேற்கு, ஆனைக்கோட்டை.
11. பிலிப்றிச்சாட் மாதகல் மேற்கு, மாதகல்.
12. வைத்திலிங்கம் சுப்பிரமணியம் இல. 37. E.Y.S மிருசுவில்.
13. கனகசபை மகேந்திரன், வேலணை சென்ரர் கிளினிக் வேலணை.
14. வேலாயுதம் ரகுநாதன், 8ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
15. வேலுப்பிள்ளை உதயகுமார், நெடுங்குளம் றோட், கொழும்புத்துறை.
16. சுப்பையா மகேந்திரன், ஏழாலை மேற்கு, ஏழாலை.
17. இராமசாமி நந்தகுமாரன், கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.
18. நல்லமுத்து ஜோசப் தருமலிங்கம், ஊரெழு மேற்கு, சுன்னாகம்.
19. சின்னத்தம்பி தெய்வேந்திரம், கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளை.
20. சுப்பிரமணியம் ஆனந்தன், யாழ் வீதி, வசாவிளான்.
21. பாலசிங்கம் ஸ்ரீ பாஸ்கரன், ஏழாலை மேற்கு, ஏழாலை.
22. நல்லையா கிருஷ்ணகுமார், மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய்.
23. தொம்மை அன்ரன் ஜெனராசன், பெரிய விளான், இளவாலை.
24. காசிலிங்கம் ஜெகநாதன், ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
25. பரமசாமி பிரேமஸ்ரீ 114/1 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ அடுத்த வாரம் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரங்கள் தொடர்ந்தும் எம்மால் வெளியிடப்படும்.

முக்கிய குறிப்பு: தற்போதைய நாட்டு நிலைமை, போக்குவரத்து சீர்கேடு காரணமாய் சாவகச்சேரி, வடமராட்சி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும் அவ்வப்பகுதி மக்களின் வசதி கருதி எமது பெயரைக் கொண்ட கிளைக்காரியாலயங்கள் அடுத்த வாரம் திறக்கப்படவுள்ளதென்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். மற்றும் எம்மிடம் கடவுச்சீட்டு. எல்லாநாட்டிற்கான சகல விதமான முத்திரைகளும் மலிவு விலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டு (PASS PORT) குறித்த தவணையிற் செய்து தரப்படும்.

A. பத்மதாஸ்
இல. 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 08-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Wednesday July 08, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org